செ.வெ.எண்: 64/ நாள்: 22.11.2019

**பர்கூர் காஞ்சனா மகாஹால் அருகில் வேளாண்மைப் பொறியியல் துறை சார்பாக ரூ.1 கோடியே 75 லட்சம் மதிப்பில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மைய புதிய கட்டிட கட்டுமான பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.சு.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் மற்றும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.சி.வி.ராஜேந்திரன் ஆகியோர் இன்று ( 22.11.2019) பூமி பூஜை செய்து பணிகளை துவக்கி வைத்தனர்.**

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் காஞ்சனா மகாஹால் அருகில் வேளாண்மைப் பொறியியல் துறை சார்பாக ரூ.1 கோடியே 75 லட்சம் மதிப்பில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மைய புதிய கட்டிட கட்டுமான பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.சு.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் மற்றும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.சி.வி.ராஜேந்திரன் ஆகியோர் இன்று ( 22.11.2019) பூமி பூஜை செய்து பணிகளை துவக்கி வைத்தனர்.

**பின்பு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கும் போது:**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள், இடுபொருட்கள் இதர உபகரணங்கள் கிடைக்கும் பொருட்டு பர்கூர் காஞ்சான மகாஹால் அருகில் ரூ. 1. கோடியே 75 லட்சம் மதிப்பில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மைய புதிய கட்டிடம் கட்டப்படவுள்ளது. அதற்கான பணிகள் இன்று துவக்கப்பட்டுள்ளது. புதியதாக கட்டப்படவுள்ள இந்த வளாகத்தில் வேளாண் உதவி இயக்குநர் அலுவலகம், தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் அலுவலகம், வேளாண் வணிக அலுவலகம், வேளாண்மை பொறியியல் துறை அலுவலகம், மற்றும் விதை சான்று அலுவலகம் ஆகிய அலுவலகங்கள் புதியதாக கட்டப்படவுள்ளது. மேலும் இந்த வளாகத்தில் விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் வழங்கும் பொருட்டு உரக்கிடங்கு, விதை கிடங்குகள் கட்டப்படவுள்ளது. இந்த கட்டிடம் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் கட்டிட முடிக்கப்பட்டு துறை பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் திரு. பாஸ்கரன், உதவி செயற்பொறியாளர் திரு.சிவக்குமார், உதவிப்பொறியாளர் திரு. சரவணன், வேளாண்மைத் துறை துணை இயக்குநர் திரு. அகண்டராவ், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு.சேகர், வேளாண்மை அலுவலர் திரு. சக்திவேல் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

வெளியிடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கிருஷ்ணகிரி.